செ.வெ.எண்:74/மார்ச்/2019 நாள்:30.03.2019

**திருச்சிராப்பள்ளியில், பாராளுமன்ற 2019-பொதுத்தேர்தல், திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டு 24 வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என செய்தியாளர் கூட்டத்தில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தகவல்.**

-------------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர், அலுவலக கூட்டரங்கில், பாராளுமன்ற பொதுத்தேர்தல் - 2019 தேர்தல் தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டு 24 வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவருமான திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திருச்சிராப்பள்ளி (24) பாராளுமன்ற பொதுத்தேர்தல் போட்டியிடும் வேட்பாளர்கள் பட்டியல் நேற்று இறுதி செய்யப்பட்டு 24 வேட்பாளர்களுக்கு சின்னங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. 1662 வாக்குச்சாவடி மையங்கள் உள்ளன. திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் 14,89,267 வாக்காளர்கள் உள்ளனர். ஆண்கள் 7,30,668 வாக்காளர்களும், பெண்கள் 7,58,459 வாக்காளர்களும், திருநங்கை 140 வாக்காளர்களும் உள்ளனர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 22,21,674 வாக்காளர்கள் உள்ளனர். 139 மண்டல குழுக்கள் உள்ளன (Zonal) மாவட்டத்தில் 177 பதட்டமான வாக்குச்சாவடிகள் என கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாக்குச்சாவடி மையங்களில் மத்திய பாதுகாப்புப்படை, சிசிடிவி கேமரா, வெப்கேஸ்ட், நுண்பார்வையாளர், என நான்கு குழுக்களில் ஏதாவது ஒரு குழுவினர் அங்கு பணியில் அமர்த்தப்படுவர். பறக்கும் படையில் 81 குழுக்களும், நிலையான குழுக்கள் 27 குழுக்களும் பணியில் ஈடுபட்டுள்ளனர். தேர்தல் பறக்கும் படை மூலம் இதுவரை 48,80,000 ரூபாய் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அதில் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட நபர்களுக்கு இதுவரை 41,00,000 ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளன. தேர்தல் விதிமீறல் தொடர்பாக இதுவரை 47 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தேர்தலில் வாக்காளர்கள் வாக்களிப்பதற்கு தேர்தல் ஆணைய உத்தரவின்படி 12 அடையாள அட்டைகளில் ஏதாவது ஒன்றை காண்பித்து வாக்காளர் பூத்சிலிப்புடன் வாக்களிக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இச்செய்தியாளர் சந்திப்பின் போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.சிவருத்ரய்யா, தேர்தல் வட்டாட்சியர் திரு.முத்துசாமி, ஆகியோர் உடன் உள்ளனர்.

**செய்தி வெளியீடு:**

30/3/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**